JUDICIAL FORM NO.53

{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC// 304/2017 |
| | : | Prosecution P.W –1 |
| NAME | : | Mohamed Anees |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday of 17.05.2022.

முதல் விசாரணை

நான் கடையநல்லூரில் குடியிருந்து வருகிறேன், நான் கடையநல்லூரில் எஸ்,எம் டிரேடர்ஸ் என்ற பெயரில் பெட்ரோல் பல்க் நடத்தி வருகிறேன், எனக்கு ஆஜர் எதிரி மற்றும் எதிரி மூர்த்தியை தெரியாது, எதிரிகள் இளம் பிழையாளி உலகநாதன் என்னுடைய பெட்ரோல் பல்க்கில் வேலை செய்து வந்ததால் அவரை தெரியும், இளம் பிழையாளி மகாராஜனை தெரியாது, கடந்த 2017 ம் ஆண்டு 6 வது மாதம் ஒரு நாள் என்னுடைய பெட்ரோல் பல்க்கில் இரவில் உள்ள வரவு பணமான 190000/- காணவில்லை என்று நான் கடையநல்லூர் காவல் நிலையத்தில் நடவடிக்கை எடுக்க புகார் மனு கொடுத்தேன்,அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான், அந்த புகார் மனு என்னிடம் காட்டப்படுவதுதான்,அந்த புகார் மனு அ,சா,ஆ,1 ஆக குறீயீடு செய்யப்டுகிறது, மேற்படி பணத்தை 3 மாதத்தில் எனக்கு கடையநல்லூர் காவல் நிலையத்தில் இருந்து கண்டு பிடித்து கொடுத்தார்கள்,

மேற்படி பணத்தை நான் இந்நீதிமன்றத்தில் மனு செய்து போட்டோ மற்றும் சி,டி எடுத்துக்கொடுத்துவிட்டு என்னுடைய பணத்தை பெற்றுக்கொண்டேன், மேற்படி பணமுள்ள போட்டோ அ,,சா,பொ, 1 ஆகவும், (7 வரிசை) சி.டி, அ.சா,பொ,2 ஆக குறீயீடு செய்யப்படுகிறது, என் பல்க்கில் வேலை செய்து வந்த உலகநாதன் திடிரென்று வேலைக்கு வராமல் நின்று விட்டதால் அவர் மீது சந்தேகம் இருப்பதாக போலிசாரிடம் சொன்னேன். உலகநாதன் அவருடன் சேர்ந்த நண்பர்கள் மூலம் பணத்தை திருடி கொண்டதாக போலிசார் சொன்னார்கள். இவ்வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் புகார் மனு கொடுத்த போது உலகநாதன் என்பவர் மீது சந்தேகம் இருப்பதாக சொல்லித்தான் புகார் மனு கொடுத்தேன் என்றால் சரிதான். மேற்படி புகார் மனுவில் உலகநாதனின் நண்பர்கள் மீது சந்தேகம் இருப்பதாக நான் சொல்லவில்லை என்றால் உலகநாதன் மற்றும் அவர்களுடன் சேர்ந்தவர்கள் மீது சந்தேகம் உண்டு என்று சொன்னேன். போலிசார் விசாரணையின் போது உலகநாதன் தவிர வேறு யாரும் மீதும் சந்தேகம் உள்ளதாக நான் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சொன்ன நாளில் சொன்ன போல் எந்த புகார் மனுவும் கொடுக்கவில்லை என்றாலும், எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், பணம் எதுவும் திருடு போகவில்லை என்றாலும், எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தமுமில்லை என்று சொன்னால் சரியல்ல.